


திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி திமுக சார்பில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் ஒன்றிய கழக பொறுப்பாளர் டி.முரளி கிருஷ்ணன் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் முன்னிலையில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சஞ்சய் திருமலை வரவேற்பில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திமுக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினார். உடன் பேச்சாளர் கரூர் முரளி, நா.அருண், பி.டி.சி.செல்வராஜ், எம்.பர்கத்துல்கான், டி.தென்னவன், ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், அக்னி ராஜேஷ், ஏ.டி.பிரியாகுமார், எஸ். மனோகரன், விமலா குமார், பிராங்க்ளின், வேலு(எ)வேலாயுதம், முகமது ரஃபி, கபிலன், ஆர் கருணாகரன், பி.கே.இ.நாகராஜன், சரத் பாபு, தமிழ்வாணன், பாலாஜி, பலராமன் சந்தோஷ், எஸ்.வேலு, வி.நேதாஜி, ராஜ்மோகன், ஆர்.சூரியா, எஸ்.சதீஷ், கமலஹாசன், ஷோபனா துளசி பாஸ்கர் அஜித்குமார், துர்கா தேவி, ரூபன், அருண், உள்பட பலர் உள்ளனர்.





நேற்று (27.06.2025) சென்னை கலைவாணர் அரங்கத்தில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் மதுரை உலகத் தமிழ்ச்சங்கத்தின் நிருவாக் குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் மற்றும் உலகத் தமிழ்ச் சங்கம் இயக்குநர் (பொறுப்பு) முனைவர் ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழர்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால்

# உடனடியாக உதவிக்கரம் நீட்டும் ஒரே தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பெருமிதம்!

திருவள்ளூர், ஜூன் 28;-

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் வடக்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில் நாடு போற்றும் நான்காம் ஆண்டு சாதனை விளக்கு பொதுக்கூட்டம் வெள்ளியூர் ஊராட்சியில் நடைபெற்றது இதில் ஒன்றிய கழக பொறுப்பாளர் டி முரளி கிருஷ்ணன் தலைமை தாங்கினார் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை ஜி.சி.சி. கருணாநிதி, வி.ஜே.உமாமகேஸ்வரன், அக்னி ராஜேஷ், ஏ.டி.பிரியாகுமார் ஒன்றிய கழக நிர்வாகிகள் எம்.பர்கத்துல்லா கான், டி.தென்னவன், எஸ்.மனோகரன், விமலா குமார் டி.பிராங்கிளின் வேலு(எ)வேலாயுதம், முகமது ரஃபி, பி.கே.இ. கபிலன், ஆர்.கருணாகரன், நாகராஜன், சரத் பாபு, தமிழ்வாணன், பாலாஜி, பலராமன், சந்தோஷ்,எஸ். வேலு முன்னிலை வகித்தார்கள் ஒன்றிய கழக இளைஞரணி அமைப்பாளர் சஞ்சய் திருமலை ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் வி.நேதாஜி, ராஜ்மோகன், சூர்யா, சதீஷ், கமலஹாசன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள் இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு திராவிட முன்னேற்ற அரசின் செய்த சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார் அப்போது பேசிய அமைச்சர் தமிழர்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் உடனடியாக ஓடோடி சென்று உதவிக்கரம் நீட்டும் ஒரே தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என பெருமிதம் தெரிவித்தார் மழை பெய்த போது தமிழக முதல்வர் நேரடியாக வந்து தெருத்தெருவாக ஆய்வு செய்து உடனடியாக 27 கோடி ரூபாய் ஒதுக்கி பணிகளை செய்ய உத்தரவிட்டார். அதில் ஏறக்குறைய அனைத்து பணிகளும் முடிவடைந்து விட்டது. அதுதான் திராவிட மாடல் ஆட்சி.

ஆனால் ஜெயலலிதா ஆட்சியில் செம்பரம்பாக்கம் ஏரி உரிய நேரத்தில் திறக்காததால் ஏற்பட்ட விளைவு காரணமாக 17 லட்சம் பேர் இடம் பெயர்ந்தார்கள். ஒரு பாக்கெட் பால் 200 ரூபாய்க்கு விற்றது. ஏறக்குறைய 14,200 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் சேதமானது. ஒன்றரை லட்சம் கால்நடைகள் அழிந்தன.

ஆனால் கலைஞர் ஆட்சியில் மழையின் போது புழல் ஏரியில் விரிசல் ஏற்பட்டது. இந்த தகவல் கலைஞருக்கு அதிகாலை மூன்று மணிக்கு அவருக்கு தெரிவிக்கப்பட்டது. வட சென்னை மக்கள் பாதிக்கக் கூடாது என்பதற்காக அந்த நேரத்தில் தள்ளு வண்டியில் நேரில் வந்து பணிகளை முடுக்கி விட்டு விரிசல் சரி செய்த பிறகு தான் சென்றார். தகுதி வாய்ந்த முதலமைச்சர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இந்தியாவிலேயே எடுத்துக்காட்டாக விளங்கியவர் தலைவர் கலைஞர்.

தமிழ்நாட்டில் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது குஜராத்தில் மோடி முதலமைச்சராக இருந்தார். அப்போது குஜராத்தில் பூகம்பம் ஏற்பட்டு நிறைய சேதமானது. அப்படிப்பட்ட நேரத்தில் ஒரு விமானம் மூலம் மருத்துவ உபகரணங்கள், மருந்துகள், மருத்துவர்கள், அதிகாரிகள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் உணவுப் பொருட்களை அனுப்பி வைத்தவர் கலைஞர்.

அப்படிப்பட்ட மோடி தான் தற்போது பிரதமராக இருக்கிறார். தமிழ்நாட்டில் புயல் மழை இடர்பாடு வந்தபோது நாம் கேட்ட நிதியைக் கொடுக்கவில்லை. நமக்கு தர வேண்டிய கல்வித் தொகையை தரவில்லை. 100 நாள் வேலை திட்ட பணத்தை தரவில்லை. நமக்கு தர வேண்டிய ஜிஎஸ்டி பணத்தை தரவில்லை. நம்முடைய பணத்தை தர வக்கில்லாத பிரதமர் மோடி. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் மாதம் மாதம் பெண்களுக்கு மகளிர் உரிமைத்தொகையை தமிழக முதல்வர் தற்போது கொடுத்துக் கொண்டிருக்கிறார். மாதா மாதம் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத்தகைய கொடுக்கும் ஒரே முதலமைச்சர் தமிழக முதலமைச்சர். பெண்கள் இலவசமாக பேருந்தில் பயணம் செய்ய மகளிர்க்கு விடியல் பயணம் கொடுத்து உள்ளார். காலை சிற்றுண்டி திட்டம் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லை. தமிழ்நாட்டில் மட்டும் தான் உள்ளது

. பல்வேறு துறைகளில் தமிழர்கள் என்று சிறந்து விளங்க காரணம் திராவிட மாடல் ஆட்சி தான். நம்முடைய முதலமைச்சர் இரவு பகல் எப்பொழுதும் தமிழ்நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும், தமிழ்நாட்டுக்கு வெளியே உள்ள தமிழர்களுக்கும், இந்திய ஒருமைப்பாட்டுக்கும் தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். என அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார் இந்நிகழ்ச்சி முன்னதாக திருவள்ளூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளராக பணிபுரிந்த புஜ்ஜி ராமகிருஷ்ணன் மறைவிற்கு இரங்கல் தெரிவித்தார்

இதில் தலைமைக் கழக பேச்சாளர் கரூர் முரளி துணை பேச்சாளர் நா அருண், தொகுதி பார்வையாளர் செல்வராஜ் அணிகளின் நிர்வாகிகள் ஷோபனா, துளசி பாஸ்கர், அஜித்குமார், துர்கா தேவி, பி.கே.இ.அருண் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---

## மயிலை த.வேலு – ஜெ.கருணாநிதி – கே.ஏழுமலை – கோ.சு.மணி பங்கேற்பு!

# தியாகராயர் நகர் 131 ‘அ’ வட்ட பாக முகவர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி அறிக்கை!

சென்னை, ஜூன் 28 -

தியாகராயர்நகர் கிழக்குப் பகுதி 131 “அ” வட்ட தி.மு.க. பாக முகவர்கள் B.L.A. 2 பாகம் உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் இன்று நடைபெறுகிறது. இதில் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. , ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை எம்.சி., கோ.சு.மணி ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்கி பேசுகின்றனர். இது குறித்து வட்ட செயலாளர் வழக்கறிஞர் எம்.கிருஷ்ணமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் கிழக்கு பகுதி 131 “அ” வட்ட திமுக பாக முகவர்கள் (B.L.A.2) பாக உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் இன்று ( 28-06-2025 சனிக்கிழமை) மாலை 6.00 மணி அளவில் கோடம்பாக்கம் “கருணீகர்” மண்டபம் (சாமியார் மடம் அருகில்) வட்ட அவைத் தலைவர் ராசி முருகன் முன்னிலையில் எனது (வட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் எம். கிருஷ்ணமூர்த்தி) தலைமையில் நடைபெறுகிறது. இதில் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. , தியகராயர்நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி , தியாகராயர்நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை, எம்.சி. , கோ.சு.மணி தியாகராயர் நகர் பார்வையாளர் திருமதி.ரத்னா லோகேஸ்வரன் ஆகியோர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

எனவே வட்ட கழகத்தை சார்ந்த பாகமுகவர்கள் (B.L.A.2) பாக உறுப்பினர்கள் (B.L.C.) B.D.A. உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழகத்தை சார்ந்த இந்நாள், முன்னாள் நிர்வாகிகள் மற்றும் ஆற்றல் மிக்க செயல்வீரர்கள், மகளிர் அணியை சார்ந்த வீராங்கணைகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார்.

---

# தியாகராயர்நகர் கிழக்கு பகுதிக்குட்பட்ட வட்டங்களின் பாக முகவர்கள் (BLA 2) பாக தொழில்நுட்ப முகவர்கள் (BDA) ஆலோசனை கூட்டம்!

## பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர்நகர் கிழக்கு பகுதி தி.மு.க. மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி இணைந்து ஓரணியில் தமிழ்நாடு என்கின்ற செயலி (APP) விளக்கி காணொளி காட்சி மூலமாக பாக முகவர்கள் (BLA 2) மற்றும் பாக தொழில்நுட்ப முகவர்கள் (BDA) நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நாளை (29-6-2025 -ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி மேற்கு மாம்பலம் எல்லையம்மன் கோவில் தெரு, சந்திரசேகர் திருமண மண்டபத்தில் தியாகராயர்நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமையில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன் எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, எஸ். மோகன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் இரா.கதிரவன், தகவல் தொழில்நுட்ப அணி, தொகுதி ஒருங்கிணைப்பாளர் அ.பொன்னுதுரை ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுகின்றனர்.

எனவே தியாகராயர்நகர் கிழக்கு பகுதியை சார்ந்த வட்ட கழக செயலாளர்கள் பாக முகவர்கள் (BLA 2) மற்றும் பாக தொழில்நுட்ப முகவர்கள் (BDA) நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

**ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ.**
செயலாளர் தியாகராயர்நகர் கிழக்கு பகுதி தி.மு.க.

---

## மயிலை த. வேலு – ஜெ.கருணாநிதி – கே. ஏழுமலை – ரத்னாலோகேஸ்வரன் – ராஜா அன்பழகன் பங்கேற்பு!

# தியாகராயர் நகர் 141(அ) வட்டத்தில் பாகம் B.L.A,2 - பாகம் பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம்!

## வட்ட செயலாளர் வழக்கறிஞர் எஸ்.லட்சுமி காந்தன் அறிக்கை!

சென்னை, ஜூன். 28 -

சென்னை தென் மேற்கு மாவட்டம், தியாகராயர்நகர் கிழக்கு பகுதி, 141 (அ) வட்ட தி.மு.க. பாகம் முகவர்கள் (B.L.A.2) பாக உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் இன்று (28.06.2025 - சனிக்கிழமை) மாலை 6 மணி அளவில், தியாகராயர்நகர் சி.ஐ.டி. நகர் 4 வது பிரதான சாலையில் அமைந்துள்ள இராஜாஜி சேவா சங்க கட்டிடத்தில், வட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் எஸ்.லட்சுமி காந்தன் தலைமையில், மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, மற்றும் தியாராயநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி, தியாகராயர்நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, தியாராயநகர் தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன், தலைமை செய்ற்குழு உறுப்பினர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி, முன்னாள் வட்ட கிளை கழக செயலாளர் ஆ.ஏழுமலை ஆகியோர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

எனவே வட்ட கழகத்தை சார்ந்த பாகம் பொறுப்பாளர்கள், (B.L.A,2), பாகம் உறுப்பினர்கள் (B.L.C), B.D.A உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அணிகளின், மாவட்ட பகுதி வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழகத்தை சார்த்த இந்நாள் முன்னாள் நிர்வாகிகள், மற்றும் ஆற்றல் மிக்க செயல்வீரர்கள் மகளிர் அணியை சார்ந்த வீராங்கனைகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறார்.

141 (அ) வட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் எஸ்.லட்சுமிகாந்தன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## சென்னை வடகிழக்கு மாவட்டத்தில்

# பகுதி - ஒன்றிய - பேரூர் வாரியாக பொறியாளர் அணி நேர்காணல்!

## மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடகிழக்கு மாவட்டத்தில் பகுதி, ஒன்றிய, பேரூர் வாரியாக பொறியாளர் அணி நேர்காணல் இன்று (28.06.2025 - சனிக்கிழமை) காலை 9 மணி அளவில், வி.ஆர்.டி. நகரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் மாநில பொறியாளர் அணித் தலைவர் துரை.சரவணன், மாநில பொறியாளர் அணிச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.நரேந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

எனவே பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்பதவிக்கு விண்ணப்பித்தவர்கள்மற்றும்விருப்பமுள்ளவர்களை பகுதிக் கழகச் செயலாளர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், பேரூர் கழகச் செயலாளர்கள் நேர்காணலில் கலந்து கொள்ள தவறாது அழைத்து வரவேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.**
செயலாளர், வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

---

## சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# ஓரணியில் தமிழ்நாடு புதிய கழக உறுப்பினர் சேர்க்கைக்கான BLA-2 BDA (வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள்) பயிற்சி முகாம்!

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் நல்லாசியுடன் துணை முதலமைச்சர் இளம் தலைவர் அவரின் வழிக்காட்டுதலில் ஓரணி தமிழ்நாடு என்ற முழுக்கத்தோடு புதிய கழகஉறுப்பினர் சேர்க்கும் பணியை விரைந்து முடிப்பதற்கு மயிலாப்பூர்/தியாகராய நகர் தொகுதிகளில் கீழ்கண்ட முகாம்களில் நடைபெறுகிறது.

| வ.எண் | நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|---|
| **28.06.2025 சனிக்கிழமை** | | | |
| 1 | மாலை 6.00 மணி | தியாகராயநகர் மேற்குபகுதி | ஸ்ரீ அலமேலு மங்காதிருமணமண்டபம், ராதாகிருஷ்ணன் தெரு, தியாகராய நகர். |
| 2 | மாலை 7.00 மணி | மயிலாப்பூர் மேற்குபகுதி | சமுதாய நலக்கூடம் கே.பி. தாசன் சாலை, ஆழ்வார்பேட்டை, |
| **29.06.2025 ஞாயிற்றுகிழமை** | | | |
| 3 | காலை 10.00 மணி | தியாகராயநகர் கிழக்குபகுதி | மாம்பலம், சந்திரசேகர் மண்டபம், மேற்கு மாம்பலம். தி நகர். |
| 4 | காலை 11.00 மணி | மயிலாப்பூர் கிழக்குபகுதி | மகிழ் பார்டி மஹால், சிறுங்கேரிமடம்சாலை, ராமகிருஷ்ணாநகர், ராஜா அண்ணாமலைபுரம். |

மேற்கண்ட பயிற்சி முகாமில் அந்தஅந்த பகுதிகளுக்குட்பட்ட பகுதிச்செயலாளர்கள் தலைமையில் நடைபெறும். எனவே BLA-2,BDA (வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள்), ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மயிலை த.வேலு எம்.எல்.ஏ.**
சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.

---

## தியாகராயர்நகர் மேற்கு பகுதிக்குட்பட்ட வட்டங்களின்

# பாக முகவர்கள் (BLA 2) - பாக தொழில்நுட்ப முகவர்கள் (BDA)_ஆலோசனை கூட்டம்!

## பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. அறிக்கை!

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர்நகர் மேற்கு பகுதி தி.மு.க. மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி இணைந்து ஓரணியில் தமிழ்நாடு

என்கின்ற செயலி (APP) விளக்கி காணொளி காட்சி மூலமாக பாக முகவர்கள் (BLA 2) மற்றும் பாக தொழில்நுட்ப முகவர்கள் (BDA) நிர்வாகிகள்

ஆலோசனை கூட்டம் இன்று (28-6-2025 - சனிக்கிழமை) மாலை 6 மணி தியாகராயர் நகர் ராதாகிருஷ்ண தெருவில் உள்ள ஸ்ரீ அலமேலுமங்கா திருமண மண்டபத்தில் தியாகராயர்நகர் தொகுதி மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை தலைமையில், மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, தியாகராயர்நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி, தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன் எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, எஸ்.மோகன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் இரா.கதிரவன், தகவல் தொழில்நுட்ப அணிதொகுதி கொண்டு ஒருங்கிணைப்பாளர் அ.பொன்னுதுரை ஆகியோர் கலந்து உரையாற்றுகின்றனர்.

எனவே தியாகராயர்நகர் மேற்கு பகுதியை சார்ந்த வட்ட கழக செயலாளர்கள் பாக முகவர்கள் (BLA 2) மற்றும் பாக தொழில்நுட்ப முகவர்கள் (BDA) நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

**கே.ஏழுமலை எம்.சி.**
செயலாளர் - தியாகராயர்நகர் மேற்கு பகுதி தி.மு.க.